**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம் - 2021**

சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 3727 எஸ்ஆர்ஜ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மறறும் 2018 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 0618 - எஸ்ஆரஜ் (எஸ்எவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் மத்திய, வட மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் நான்கு மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. தரமான அத்தியாவசியமான சுகாதார சேவைகளுக்கு தொடர்ச்சியான கவனிப்பு மற்றும் உலகளாவிய அணுகுதலை வழங்குதல் என்ற கருத்தின் அடிப்படையில் ஆரம்ப மருத்துவ சிகிச்சை முறைமையின் வினைத்திறன், சமபங்கு மற்றும் பதிலழிக்கக்கூடிய தன்மை என்பவற்றை மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் ரூபா 7,751 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியன் தொகையான மதிப்பிடப்பட்ட மொத்த கிரயத்தில், ரூபா 5,813 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 37.5 மில்லியன் சலுகை கடனாகவும் ரூபா 1,938 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 12.5 மில்லியன் மானியமாகவும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 திசெம்பர் 01 இல் தொடங்கி இருந்ததுடன் 2023 நவம்பர் 30 அளவில் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 20(1) ஆம் பிரிவு மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2019 யூலை 09 ஆம் திகதிய சீஜீஆர்ஜ/2019/03-01 (in & cir) ஆம் இலக்க கடிதம் | வரி விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்படாத 19 சந்தர்ப்பங்களில் ரூபா 4.2 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்தது. | செயற்பாட்டில் உள்ள வற் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு மாத்திரமே வற் கொடுப்பனவை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்போது, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இருந்து வற் பதிவுக்கான உறுதிப்படுத்தல் பெறப்பட்டு வருகிறது. | பெறுமதி சேர் வரியானது சட்டத்தின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டியதுடன் இந்த வரிகள் முறையாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 15 ஆம் திகதி நிதி அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி. | சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்களிற்கு தங்குமிடம் மற்றும் உணவு படியாக அதிகபட்சமாக ரூபா 2,000 தொகை செலுத்தப்பட முடியும். எனினும், மீளாய்வாண்டில் 02 தடவைகளில் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக இந்த எல்லையை விஞ்சி ரூபா 85,300 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | சந்தை விலைவிகிதங்களின் பிரகாரம் ரூபா 2,000 இற்கு உணவு மற்றும் தங்குமிடம் பெறுவது கடினமாகும். | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை கைநூலிற்கு வழங்கப்பட்ட பிற்சேர்க்கை 32. | இந்த ஏற்பாடுகளை மீறி 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களுக்கான படிகளாக ரூபா 1.5 மில்லியன் தொகையை செயற்திட்டம் செலுத்தியிருந்தது. | இந்த கொடுப்பனவுகள் செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | இந்த தொகை பொறுப்பான தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். |

3. **பௌதீக செயலாற்றல்**

3.1 **செயற்திட்ட நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் 100 சதவீத பௌதீக செயலாற்றல் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட பத்து நடவடிக்கைகளில், பௌதீக செயன்முன்னேற்றம் 47 சதவீதத்திலிருந்து 87 சதவீதம் வரையான விச்சில் காணப்பட்டது. | பல்வேறு காரணங்களால் இனங்காணப்பட்ட அந்த 10 நடவடிக்கைகளும் 100% முன்னேற்றத்தைக் காண்பித்திருக்கவில்லை. | விரும்பிய முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் 100 சதவீத பௌதீக செயலாற்றல் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட 41 செயற்பாடுகளில், 15 செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல் 2 சதவீதத்தில் இருந்து 75 சதவீதம் வரையான விச்சில் இருந்ததுடன் அவற்றில் 11 செயற்பாடுகள் 20 சதவீதத்திற்கும் குறைவான முன்னேற்றத்தைக் கொண்டிருந்தன. மேலும், 17 செயற்பாடுகளுக்கான கேள்வி செயன்முறை பூர்த்திசெய்யப்படாததாலும் ஏனைய 09 செயற்பாடுகளுக்கு மீள்கேள்வி கோரப்பட்டதாலும், ஆண்டின் போது பௌதீக முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நிர்மாணத்தின் போது, நாட்டின் நிதி நிலைமை மற்றும் கட்டிடப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக ஒப்பந்ததாரர்கள் தாங்க முடியாத விலை உயர்வுகளை செலுத்த வேண்டியிருந்தது. நாட்டில் நிலவும் தொற்றுநோய்களின் தாக்கத்தால், தொழிலாளர் கிடைக்காமை மற்றும் விலை உயர்வு ஆகியவற்றால் மோசமடைகிறது. | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் 06 செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல் திட்டமிடப்பட்டிருக்காததுடன் செயற்திட்டத்தின் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் 05 செயற்பாடுகளில் உள்ளூர் பயிற்சி | சுகாதார அதிகாரிகள் வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் இது அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |

நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அனுராதபுர மாவட்டத்தில் கொன்வெவ ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2019 ஆகஸ்ட் 15 இல் ரூபா 27 மில்லியனுக்கு வரி விலக்குடன் வழங்கப்பட்டதுடன் ஒப்பந்த காலப்பகுதி 350 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது. எனினும், 2022 சனவரி 13 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் ஏறத்தாழ 60 சதவீதமாக இருந்தது. | ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் காரணமாக ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | செயற்திட்டத்தை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சிங்கபுர ஆரம்ப மருத்துவ சிகிச்சை நிலையத்தின் நிர்மாணம் 2021 செப்தெம்பர் 15 இல் ரூபா 29.40 மில்லியன் தொகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 4 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2022 சனவரி 21 வரை நிர்மாண பணிகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | யானை வேலி அமைத்தல் தேவைப்பாடொன்றாக காணப்பட்டதால் தாமதம் ஏற்பட்டது. | பொறுப்பான தரப்பினரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உரிய காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மத்திய மாகாணத்தில் உள்ள ஹதரலியத்த ஆதார வைத்தியசாலையின் OPD கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் 2021 மே மாதத்தில் உள்ளவாறு ரூபா 30.5 மில்லியன் செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எனினும், ஒப்பந்ததாரரிற்கு இரண்டு வேலை உருப்படிகளுக்கு ரூபா 202,751 மேலதிகக்கொடுப்பனவும், துணைக்கருவிகளை நிறுவாமல் ரூபா 182,775 தொகையும், தரமற்ற துணைக்கருவிகளை நிறுவியதற்காக ரூபா 1,352,135 தொகையும் செலுத்தப்பட்டுள்ளன. | கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்ட உண்மைகள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படாத வகையில் இப்பிரச்சனை விரைவாக தீர்க்கப்பட வேண்டும். |
| (ஈ) | யதார்த்தமான மதிப்பீடுகள் தயாரிக்கப்படாததன் காரணமாக அனுராதபுர மாவட்டத்தில் ரூபா 26.8 மில்லியன் தொகையாக இருந்த | கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்ட உண்மைகள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | பணியிட நிலைமைகள் மற்றும் பயனர் தேவைப்பாடுகள் ஆகியவற்றின் |

| | | | |
|---|---|---|---|
| | கொன்வெவ ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவின் நிர்மாணத்திற்கான கிரய மதிப்பீடு ரூபா 37.9 மில்லியன் வரை 41.4 சதவீதத்தால் திருத்தப்பட வேண்டியிருந்தது. | | பரீட்சிப்பிற்குப் பின்னர் சரியான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 குறைப்பயன்பாடுடைய வளங்கள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்கு ரூபா 5,745.71 மில்லியன் நிதியளிக்கப்பட்டது. எனினும், இந்தத் தொகையில் ரூபா 4,661.02 மில்லியன் தொகை மாத்திரமே செயற்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் 18.87 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,084.69 மில்லியன் தொகை செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டது. | உலகளாவிய தொற்றுநோய் ஏற்பட்டுள்ள சூழலில் இந்த செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டின் பொருளாதார நிலை காரணமாக 100% நிதி முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு பல தடைகள் உள்ளன. எனினும், செயற்திட்டம் திருப்திகரமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. | விரும்பிய முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் செயற்திட்டத்திற்காக உள்ளூர் நிதியாக ரூபா 247 மில்லியன் கட்டுநிதி கோரப்பட்ட போதிலும், ரூபா 220 மில்லியன் மாத்திரமே பெறப்பட்டது. இதில் ரூபா 210.88 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. | மருத்துவ உபகரணங்களின் பெறுமதியில் 11.3% கொடுப்பனவு, உள்ளூர் வரிகளின் கொடுப்பனவு மற்றும் தளபாடங்களின் பெறுகை ஆகியவற்றிற்கு செயற்திட்டத்தின் இணை நிதி பயன்படுத்தப்படுகிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள உலகளாவிய தொற்றுநோய் மற்றும் நிதி நெருக்கடி காரணமாக மருத்துவ உபகரணங்களை வழங்குதல் மற்றும் நிர்மாண பணிகளில் எற்பட்ட தாமதம் காரணமாக பயன்படுத்தப்படாத உள்ளூர் நிதிகளில் 4.14% ஏற்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான திட்டமிடப்பட்ட நிதி செயலாற்றல் ரூபா 4,435.51 மில்லியன் ஆகும். | அசல் HSEP இன் கீழ் இனங்காணப்பட்ட பல நடவடிக்கைகள் AF இற்கு மாற்றப்பட்டுள்ளன. மேலும், APDRF மானியத்தின் கீழ், | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| எனினும், உண்மையான நிதி செயலாற்றல் 57.78 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,562.85 மில்லியன் மாத்திரமேயாகும். | பல அவசரகால பெறுகைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | |

**3.4 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையின் பரிந்துரையின் பிரகாரம் 2022 ஏப்ரல் 30 வரை பொறுப்பான தரப்பினரிடமிருந்து எந்த காரணமும் அல்லது அதிகாரமும் இல்லாமல் செலுத்தப்பட்ட ரூபா 1.66 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த தொகையை மீளளிக்குமாறு பயனாளியிடம் கோரிக்கை விடுப்பதற்கும், தவறினால் அமைச்சு மட்டத்திலான விசாரணையை நடாத்தி பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | இந்த தொகை பொறுப்பான தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். |